02.01.16

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

**உணவு தானிய உற்பத்தி குறைய வாய்ப்பு**

பல்வேறு மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வறட்சி நிலையானது நாட்டின் உணவுதானிய உற்பத்தியை பாதிக்கும் என மத்திய வேளாண் அமைச்சர் ராதா மோகன் சிங் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

2015-இல் பெரும்பாலான மாவட்டங்களில் 14 சதவீதம் அளவிற்கு தென்மேற்குப் பருவமழை பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. 10 மாநிலங்களில் அமைந்துள்ள 287 மாவட்டங்களில் வறட்சி நிலை அறிவிக்கப்பட்டது. இது, நிச்சயம் வேளாண் உற்பத்தியில் பாதிப்பை ஏற்படுத்தும். எனினும், பாதிப்புகளைக் குறைக்க மத்திய அரசு தகுந்த நடவடிக்கைகளைமேற்கொண்டுள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மானிய விலையில் விதைகள் மற்றும் டீசல் உள்ளிட்ட பல உதவிகள் மத்திய அரசின் சார்பில் வழங்கப்பட்டுவருகின்றன.

கர்நாடகம், சத்தீஸ்கர், மகாராஷ்டிரம் மற்றும் மத்தியபிரதேசம் ஆகிய நான்கு மாநிலங்களுக்கு வறட்சி நிவராணத் தொகையாக ரூ.7,898 கோடியை வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆறு மாநிலங்களின் வறட்சி நிவாரணம் குறித்து விரைவில் முடிவெடுக்கப்பட உள்ளது.

விவசாயிகளின் சாகுபடி செலவுகளைக் குறைத்தல், அவர்களின் லாபத்தை உறுதிப்படுத்தும் வகையில் பிரதமரின் வேளாண்துறை மேம்பாட்டுக் திட்டத்தை தீவிரமாக அமல்படுத்தல், தேசிய வேளாண் அங்காடிகள் அமைத்தல் மற்றும் பயிர் காப்பீட்டு திட்டங்களை அறிமுகப்படுத்தல் ஆகியவற்றை 2016-இல் மத்திய அரசு முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த உள்ளது என்று ராதா மோகன் சிங்

தெரிவித்தார்.

**பசுந்தேயிலை விலை உயர்வு**

நீலகிரி மாவட்டத்தில் பசுந்தேயிலை மகசூல் குறைந்துள்ளதால் அதன் விலை உயர்ந்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டு வரும் பெரும்பாலான தேயிலைத் தூள் குன்னூரில் உள்ள அரசு, தனியார் ஏல மையங்கள் மூலமாக விற்பனை செய்யப்படுகிறது. இதில், ஏல மையங்களில் வாரந்தோறும் விற்பனை செய்யப்படும் தேயிலைத் தூளின் விலைக்கு ஏற்றாற்போல் பசுந்தேயிலைக்கு உண்டான விலையை உற்பத்தியாளர்கள் விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றனர்.

மாவட்டம் முழுவதும் பனியின் தாக்கம் அதிகரித்து வருவதால் தேயிலை மகசூல் குறையத் துவங்கியுள்ளது. இதனால், ஏல மையங்களுக்கு வரும் தேயிலைத் தூளின் வரத்தும் குறைந்து வருகிறது. இதன் காரணமாக, பசுந்தேயிலையின் விலை உயர்ந்துள்ளது.

அதன்படி, இந்த வாரம் சாதாரண ரக பசுந்தேயிலை கிலோ ரூ. 13, நடுத்தரத்திற்கு ரூ. 18, உயரகத்திற்கு ரூ. 22 வழங்கப்பட்டுள்ளது. மகசூல் குறைந்து வரும் நிலையில் பசுந்தேயிலையின் விலை அதிகரித்தும் பலனில்லை என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

**"மானிய திட்டங்களை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்'**

அரியலூர் மாவட்ட வேளாண் துறையிலுள்ள மானியங்களை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ்.

ஆட்சியரகக் கூட்டரங்கில் புதன்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் அவர் மேலும் பேசியது:

அரியலூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 954 மி.மீ., ஆகும். நடப்பு ஆண்டில் டிசம்பர் 2015 வரை இயல்பான மழையளவு 954 மி.மீ.,க்குப் பதிலாக இதுவரை 1078.49 மி.மீ., மழை பெறப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் சராசரியாக 1.10 லட்சம் ஹெக்டேர் பரப்பில் வேளாண் பயிர்கள் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. டிசம்பர் மாதம் வரை 64,236 ஹெக்டேர் பரப்பளவில் வேளாண் பயிர்கள் மற்றும் 33,265 ஹெக்டேர் தோட்டக்கலைப் பயிர்கள் என மொத்தம் 97,501 ஹெக்டேர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இந்த பயிர்களுக்கு தேவையான 2,104 மெ.டன் யூரியா, 703 மெ.டன் டி.ஏ.பி, 759 மெ.டன் பொட்டாஷ் மற்றும் 712 மெ.டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

இதுவரை சான்று பெற்ற நெல் விதைகள் 246 மெ.டன் வேளாண்மை விரிவாக்க மையம் மூலமாகவும், கூட்டுறவுத் துறை மூலம் 56 மெ.டன் மற்றும் தனியார் விதை விற்பனை மையங்கள் மூலம் 80 மெ.டன் என கூடுதலாக 382 மெ.டன் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

தற்போது வேளாண்மை விரிவாக்க மையங்களில் 14 மெ.டன், கூட்டுறவுத் துறையில் 6.84 மெ.டன் மற்றும் தனியார் கடைகளில் 20 மெ.டன் என மொத்தம் 40.84 மெ.டன் குறுகிய கால நெல் விதைகள் (ஏடிடீ. 36, ஏடிடீ 43, ஏடிடீ 45) கையிருப்பில் உள்ளது.

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் - பயறு இயக்கத் திட்டத்தின் கீழ் 2,600 ஹெக்டர் பரப்பில் டிஏபி தெளிப்பு பணி மேற்கொள்ள ஹெக்டருக்கு ரூ. 650 சதவீதம் பின்னேற்பு மானியம் வழங்கப்பட உள்ளது.

தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் டிஏபி வாங்கி பயன்படுத்தியமைக்கான ரொக்கப் பட்டியல் மற்றும் நிழற்பட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். இதற்கு நிதி இலக்காக ரூ. 16.90 லட்சம் மானியத் தொகை பெறப்பட்டுள்ளது. தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் (பயறு வகை) நடப்பு பருவத்தில் ஒரே கிராமத்தில் தொகுப்பாக (100 ஹெக்டேர்) நிலக்கடலை மற்றும் ஊடுபயிராக உளுந்து சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தொகுப்பு செயல்விளக்கம் அமைத்திட ஹெக்டேருக்கு ரூ. 7,500 வீதம் மானியத்தில் இடுபொருட்கள் அனைத்து வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விநியோகம் செய்யப்பட உள்ளது.

எண்ணெய்வித்துகளுக்கான தேசிய இயக்கத்திட்டத்தின் கீழ் நிலக்கடலையில் தொகுப்பாக (945 ஹெக்டேர்) செயல்விளக்கம் அமைக்கும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ. 2000 வீதம் மானியத்தில் இடுபொருட்கள் வழங்கப்பட உள்ளது. மேலும் இத்திட்டத்தில் 430 ஹெக்டேர் நிலக்கடலை விதைப்பு வயல்களில் களைக்கொல்லி தெளிப்பு செய்ய பின்னேற்பு மானியம் வழங்கப்பட உள்ளது. இந்த இனங்களின் கீழ் பெறப்பட்ட மானிய தொகைக்கான நிதி இலக்கு ரூ. 21.05 லட்சம் ஆகும்.

எனவே வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்படும் மேற்கண்ட திட்டங்களில் அரியலூர் மாவட்ட விவசாயிகள் பங்கேற்று உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்றார்.

**களைகட்டியது காரைக்கால் மீன்பிடித் துறைமுகம்**

காரைக்கால் துறைமுகத்தில் வெள்ளிக்கிழமை ஏராளமான மீன்கள் படகுகளில் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்பட்டதை அடுத்து அப்பகுதி களைகட்டியது.

கடந்த டிசம்பர் மாதம் வங்கக் கடலில் நீடித்த காற்றழுத்த தாழ்வு பகுதியால் கடல் சீற்றம், டிச.26-ஆம் தேதி சுனாமி நினைவு நாள், அதைத் தொடர்ந்து சூறைக் காற்று, கடல் சீற்றம்

உள்ளிட்ட காரணங்களால் மீனவர்கள் கடலுக்கு செல்லாமல் இருந்தனர். இதனால் மீன்வரத்து வெகுவாக குறைந்துபோனது. இந்நிலையில், அண்மையில் மீன்பிடிக்க கடலுக்குச் சென்ற பெரும்பாலான படகுகள் வெள்ளிக்கிழமை கரை திரும்பின. இதனால் கடந்த சில தினங்களாக நீடித்து வந்த மீன்களின் வரத்து குறைவுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

காரைக்கால் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 250-க்கும் மேற்பட்ட விசைப் படகுகள் கடலுக்கு சென்று வெள்ளிக்கிழமை மாலை 200 படகுகள் கரை திரும்பின. ஏற்றுமதி தரம் வாய்ந்த வஞ்ஜிரம், கொடுவா, பாறை மீன்களின் வரத்து அதிகம் இருந்தது. அத்துடன், புள்ளித் திருக்கை, குருவித் திருக்கை, செந்திருக்கை வகை மீன்களும் இருந்தன. சிங்கி இறால், தக்காளி இறால் போன்ற பல வகை இறால்களும் படகுகளில்

இருந்து இறக்கப்பட்டன. சுமார் 5 டன் இறால் மட்டும் இறக்கப்பட்டு, ஏலத்தில் முகவர்களுக்கு அளிக்கப்பட்டதாக மீனவர்கள் கூறினர்.

சிறிய வகை மீன்கள், பெரிய வகை மீன்கள், இறால், நண்டு உள்ளிட்டவை காரைக்கால் துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டன. இவற்றின் வருகை பருவமழை தொடக்கத்துக்கு முன்பு இருந்த நிலையாக இருந்ததால், மீனவர்களும், முகவர்களும் மகிழ்ச்சியில் ஆழ்ந்தனர். உள்ளூர் மீன் வியாபாரிகளும் திரளாக துறைமுகத்துக்கு வந்திருந்து, மீன், இறால், நண்டுகளை வாங்கிச் சென்றனர்.

கடந்த பல நாள்களாக மீன்வரத்து குறைவால் உச்சத்தில் இருந்த விலை, தற்போது வரத்து மிகுதியால் விலை தளர்வு இருக்கும். வகை வகையான மீன்களும் கிடைக்கும் வாய்ப்பு உருவாகியிருப்பதாகவும், புத்தாண்டு தொடக்க நாள் மீன் விற்பனையாளர்களுக்கு மகிழ்ச்சி பொங்கும் நாளாக அமைந்துள்ளதாகவும் பெரும்பாலான மீனவர்கள் தெரிவித்தனர்.

**உளுந்து, பயறு விதை தட்டுப்பாடின்றி வழங்க வலியுறுத்தல்**

காரைக்காலில் அறுவடை தொடங்கவுள்ள நிலையில், உளுந்து, பயறு விதை தட்டுப்பாடின்றி வழங்கும் நடவடிக்கையை புதுச்சேரி அரசு முன்னதாகவே முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

காரைக்கால் மாவட்ட பாமக செயலர் க.தேவமணி இதுகுறித்து வெள்ளிக்கிழமை கூறியது: காரைக்கால் மாவட்டத்தில் பெய்த மழையால் விவசாயம் பெருமளவு பாதித்துவிட்டது.

ஏற்கெனவே ஆழ்குழாய் பாசனம் மூலம் பயிரிட்டவர்கள் உள்ளிட்டோர் அறுவடைப் பணியை தொடங்கவுள்ளனர். பொதுவாகவே நெல் அறுவடை முடிந்த தருணத்தில், விளை நிலத்தில் உளுந்து, பயறு தெளிப்பதை விவசாயிகள் வழக்கத்தில் கொண்டுள்ளனர்.

நெல் விதை தருவதிலும், உரங்கள் தருவதிலும் புதுச்சேரி அரசு மெத்தனத்துடனேயே பல ஆண்டுகளாகச் செயல்பட்டுவருகிறது.

இது நிகழாண்டும் ஏற்பட்ட சூழலில் விவசாயிகளுக்கு கடுமையான சிரமத்தை ஏற்படுத்தியது.

விவசாயிகள் கூடுதல் விலைகொடுத்து தமிழகத்தில் இப்பொருள்களை வாங்கி பயன்படுத்த நேரிட்டது.

பொதுவாகவே, விவசாயிகளுக்குத் தேவை என்ன, எந்தத் தருணத்தில் தேவை இருக்கிறது என்பதை அறிந்து வேளாண் துறை அதற்கேற்ப செயல்படுவது இல்லை. இதனால் விவசாயிகள் அடையும் துயரத்துக்கு அளவே இல்லை.

அடுத்த 10, 15 நாள்களில் அறுவடை தொடங்கும்போது அடுத்த சில நாள்களில் உளுந்து, பயறு தெளிக்க விவசாயிகள் ஆயத்தமாகி விடுவர். மழையால் பாதித்த மக்களுக்கு நிவாரணம் எப்போது கிடைக்குமென்பதே தெரியாத நிலை இருக்கிறது.

கூட்டுறவுச் சங்கங்களில் விவசாயிகள் வாங்கிய வேளாண் கடனை ரத்து செய்யவேண்டுமென கோரியதையும் புதுச்சேரி அரசு இதுவரை நிறைவேற்ற முன்வரவில்லை.

இந்தச் சூழலில் விவசாயிகள் தன்னிச்சையாக செய்யமுடிந்ததை செய்துகொண்டிருக்கின்றனர். நெல் அறுவடைக்குப் பிந்தைய செயல்பாடுகளில் புதுச்சேரி அரசு விவசாயிகளுக்கு உதவவேண்டும். உளுந்து, பயறு பயிர் செய்யக்கூடிய ஆர்வமான விவசாயிகள் எவ்வளவு பேர், விதை எவ்வளவு தேவை இருக்கிறது போன்ற கணக்கெடுப்புகளை வேளாண்துறை உடனடியாக மேற்கொள்ளவேண்டும்.

நெல் அறுவடை நடக்கும் தருணத்திலேயே, உளுந்து, பயறு விதை உழவரகத்தின் மூலம் மானியத்தில் விநியோகிக்க வேளாண் துறை தற்போதே தயாராகவேண்டும் என்றார்.

**வேதாரண்யத்தில் மரக்கன்றுகள் வழங்கல்**

நாகை மாவட்டம், வேதாரண்யத்தில் புத்தாண்டு பிறப்பையொட்டி கடைகள், வணிக நிறுவனங்கள், பொது மக்களுக்கு மரக் கன்றுகள் வெள்ளிக்கிழமை இலவசமாக அளிக்கப்பட்டன.

வேதாரண்யம் வணிகர் சங்கம் சார்பில் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பணியில் பயன்தரும் ஆயிரம் மரக் கன்றுகள் அளிக்கப்பட்டன.

வணிகர் சங்க நாகை தெற்கு மாவட்ட தலைவர் எஸ்.எஸ்.சீனிவாசன் மரக் கன்றுகள் வழங்குவதை தொடங்கி வைத்தார்.

வேதாரண்யம் சங்கத் தலைவர் திருமலை.செந்தில் தலைமை வகித்தார். துணைத் தலைவர் வி.அய்யாத்துரை, செயலாளர் டி.சுகன், இணைச் செயலாளர் எஸ்.முரளி, நல்லாசிரியர் வைரக்கண்ணு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**இயற்கை உழவர்களின் ஒருங்கிணைப்பு மாநாடு**

குத்தாலம் அருகே எலந்தங்குடியில் இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வாரின் நினைவேந்தல், இயற்கை உழவர்களின் ஒருங்கிணைப்பு மாநாடு செவ்வாய், புதன்கிழமை என இரண்டு நாள் நடைபெற்றது.
நிகழ்ச்சிக்கு தமிழக இயற்கை உழவர் இயக்கத் தலைவர் சிக்கல் அ.அம்பலவாணன் தலைமை வகித்தார். இயற்கை வேளாண் வல்லுநர்கள் பாலையூர் ரெங்கநாதன், முருகையன், டெல்டா மாவட்ட விவசாய சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் சேரன், பாரம்பரிய நெல் காப்பாளர் சோமு இளங்கோ, தமிழக விவசாய சங்கங்களின் ஒருங்கிணைப்பாளர் பாண்டியன், டெல்டா பாசன சபைக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் துரைராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.
இயற்கை வேளாண் வல்லுநர் எலந்தங்குடி அல்லீஸ்பாக் வரவேற்றார். மாநாட்டில் உழவர்களின் பிரச்னையும்-அதற்கான தீர்வும், பாரம்பரிய வேளாண்மையின் முக்கியத்துவம், உழவர்களின் பிரச்னைகளுக்கான தீர்வுகள் ஆகிய தலைப்புகளில் கருத்தரங்கம் நடைபெற்றது.
இயற்கை வேளாண் வல்லுநர்கள் நெல்ஜெயராமன், மணியரசன், சுரேஷ்கண்ணா, சுல்தான் இஸ்மாயில், ஜெயச்சந்திரன், ஏராளமான வேளாண் வல்லுநர்கள் கலந்து கொண்டனர். மாநாட்டின் நிறைவில் மழைநீர் பொறியாளர் வரதராஜன், ராமமூர்த்தி, மூலிகை ஆராய்ச்சி

மருத்துவர் மணிவாசகம் ஆகியோருக்கு நம்மாழ்வார் நினைவு விருது வழங்கப்பட்டது.

**நீர்மட்டம் 30 அடியாக உயர்வு: பொய்கை அணை இன்று திறப்பு**

குமரி மாவட்டத்தில் உள்ள பொய்கை அணையின் வாய்க்கால் மதகு சனிக்கிழமை (ஜன.2) திறக்கப்படுகிறது.

ஆரல்வாய்மொழி அருகே செண்பகராமன்புதூர் மலைப் பகுதியில் அமைந்துள்ளது பொய்கை அணை. இந்த அணையின் மொத்தக் கொள்ளளவு 42.65 அடியாகும். இந்த அணை கட்டி முடிக்கப்பட்ட ஆண்டான 2,000 ஆவது ஆண்டிற்குப் பிறகு, இப்போது தான் அணையின் நீர்மட்டம் 30 அடியை எட்டியுள்ளது.

இந்த அணைக்கு ஆற்று மதகு, வாய்க்கால் மதகு என இரு மதகுகள் உள்ளன. இதில் அணையில் ஓரடி நீர்மட்டம் இருந்தாலே ஆற்று மதகில் தண்ணீர் திறக்கலாம். அதே வேளையில் அணையில் குறைந்தபட்சம் 18 அடி நீர்மட்டம் இருந்தால்தான் வாய்க்கால் மதகுகளைத் திறக்க முடியும்.

ஆற்று மதகு மூலம் கரும்பாட்டு குளம், கிருஷ்ணன் குளம், பொய்கை குளம், குட்டி குளம், செண்பகராமன் பெரியகுளம், தோவாளை பெரிய குளம், வைகை குளம், ஆரல்வாய்மொழி பெரிய குளம் ஆகிய 8 குளங்களும், கால்வாய் மதகு மூலமாக ஆரல்வாய்மொழி பகுதியில் உள்ள லட்சுமி புதுக்குளம், அனுவத்தி குளம், அத்தி குளம் ஆகியவையும், திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் வட்டத்துக்கு உள்பட்ட சாலை புதுக்குளம், தெற்கு சிவகங்கை குளம், மேல பாலார் குளம், கீழ பாலார் குளம், பழவூர் பெரிய குளம் ஆகியவையும் பாசன வசதி பெறுகின்றன. மொத்தம் உள்ள இந்த 16 குளங்களின் வாயிலாக 1,357 ஏக்கர் நிலங்கள் (1992 ஆம் ஆண்டு கணக்கின்படி) பாசன வசதி பெறுகின்றன.

இந்த அணை கட்டப்பட்ட 10 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த 2010 ஆம் ஆண்டு முதன்முதலில் அணையின் நீர்மட்டம் அதிகபட்ச அளவாக 20 அடியை எட்டியது. இதையடுத்து கடந்த 2011 ஆம் ஆண்டு இந்த

அணையின் வாய்க்கால் மதகுகள் திறக்கப்பட்டன. அதன் பிறகு 2015 ஆம் ஆண்டு பெய்த தொடர் மழையின் காரணமாக அணையின் நீர்மட்டம் 30 அடியை எட்டியுள்ளது.

திறப்பு: இந்நிலையில் அணையின் வாய்க்கால் பாசன மதகுகளை திறக்கும் வகையில் தமிழக அரசு ஆணை வெளியிட்டுள்ளதையடுத்து சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அணை திறக்கப்படுகிறது. இது குறித்து பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் சுப்பிரமணி கூறியதாவது:

பொய்கை அணையின் நீர்மட்டம் 30 அடியாக உயர்ந்துள்ளது. இந்த அணையைத் திறந்து பாசன நீர் கொடுக்க வேண்டுமென்று தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. இதையடுத்து சனிக்கிழமை அணை திறக்கப்படுகிறது என்றார் அவர்.

**2016இல் பேச்சிப்பாறை அணைக்கு வயது 110!**

குமரி மாவட்ட மக்களின் ஜீவாதாரமாக விளங்கும் பேச்சிப்பாறை அணை 2016இல் 110 வயதை எட்டுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தை செழிப்பாக்கி மக்களின் வாழ்விற்கும், வளத்திற்கும் அடிநாதமாகத் திகழ்ந்து வருகிறது பேச்சிப்பாறை அணை.

மழைக்காலங்களில் பெருவெள்ளத்தோடும், கோடையில் வறண்டும் காணப்பட்ட கோதையாற்றை மக்களின் வளமான வாழ்விற்கு பயன்படுத்தும் பொருட்டு பேச்சிப்பாறை அணை கட்டுவதற்கு ஆன ரூ. செலவு ரூ. 26.10 லட்சம்.

ராமவர்மா ஸ்ரீமூலம் திருநாள் மகாராஜாவின் ஆட்சிக் காலத்தில் திருவிதாங்கூர் நாட்டின் பொறியாளர்கள் மற்றும் ஆங்கிலேயப் பொறியாளர்கள் தயாரித்த திட்டத்தின் படி 1897இல் இந்த அணை கட்டும் பணி தொடங்கப்பட்டு 1906இல் நிறைவடைந்தது.

அப்போது அணையின் நீர்மட்ட கொள்ளளவு உயரம் 42 அடி. பின்னர் 1964-1970இல் மேலும் ரூ. 15 லட்சம் செலவிட்டு, அணையின் உயரம் 48 அடியாக உயர்த்தப்பட்டது. தற்போது அணையின் நீளம் 1,396 அடி.

மொத்த கொள்ளளவு 5,306 மில்லியன் கன அடி. அணையில் ஆண்டு சராசரி மழையளவு 2,180 மி.மீ. ஆகும்.

மக்களின் பிரார்த்தனை: இந்த அணையானது 2016இல் 110 ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. இந்த நேரத்தில் முழுக் கொள்ளளவு நீர்மட்டத்துடன் கடல்போல காட்சியளிக்கும் அணையானது, என்றும் வற்றாத ஜீவ ஊற்றாகவும், மேலும் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு நீடித்து நிலைக்க வேண்டுமென்பதே குமரி மாவட்ட மக்களின் பிரார்த்தனையாக உள்ளது.

இது குறித்து முன்னோடி விவசாயி பி. ஹென்றி கூறியதாவது: 110 ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த அணையை குமரி மாவட்ட மக்களுக்கு அளித்த ராமவர்மா ஸ்ரீமூலம் திருநாள் மகாராஜாவும், ஆங்கிலேய பொறியாளர் அலெக்சாண்டர் மின்சினும் நினைவுகூரத்தக்கவர்கள் என்றார் அவர்.

**பூக்கள் விலை கடும் உயர்வு**

புத்தாண்டை முன்னிட்டு பூக்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

கிறிஸ்துமஸ், புத்தாண்டை அடுத்து பூக்களின் தேவை அதிகரித்துள்ளதால் இவற்றின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. ஆலங்குளம் பகுதியில் மல்லிகை, பிச்சி, கேந்தி போன்ற பூ ரகங்கள் பயிரிடப்படுகின்றன. இவற்றின் வரவு மற்றும் செலவைக் கருத்தில்கொண்டு பூக்களின் விலை அன்றாடம் நிர்ணயம் செய்யப்படுகிறது.

கிறிஸ்துமஸை ஒட்டி கடந்த வாரம் மல்லி, பிச்சி போன்ற பூக்களின் விலை கிலோவுக்கு ரூ.1000 வரை இருந்தது. வார நாள்களில் இதன் விலை ரூ.400 என விற்பனையாகி வந்த நிலையில், புத்தாண்டை முன்னிட்டு வியாழக்கிழமை, பிச்சி, மல்லி போன்றவை ரூ.1250 என விற்பனையானது.

வழக்கமாக, ரூ.40 முதல் 50 வரை விற்பனையாகும் சம்பங்கி, ரோஸ், செவ்வந்தி போன்ற பூக்கள் வியாழக்கிழமை ரூ.200-க்கு

விற்பனையானது. அதிகபட்சமாக ரூ.15-க்கு விற்பனையாகி வந்த கேந்திப் பூக்கள் கடந்த ஒரு மாத காலமாக ரூ.100 என விற்கப்படுகிறது. இதுவரை இந்த விலைக்கு கேந்தி மலர்கள் விற்றதில்லை எனவும், ஓசூர் பகுதியில் இருந்துதான் அதிக அளவில் வருவதால் இந்த விலை நீடிக்கிறது எனவும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

**கால்நடைகளுக்கு நீலநாக்கு நோய்த் தாக்குதல் அபாயம்: தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தல்**

திருநெல்வேலி மாவட்டத்தில் பெய்த தொடர்மழை காரணமாக நெற்பயிரில் குலைநோய் தாக்குதல் உள்ளதாகவும், ஆடுகளுக்கு நீல நாக்கு நோய் தாக்கும் அபாயம் உள்ளதாகவும் ஆட்சியர் மு.கருணாகரன் எச்சரித்துள்ளார்.

மேலும், இதுதொடர்பாக வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, கால்நடைப் பராமரிப்புத் துறையினர் கண்காணித்து பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்க வருவாய்த் துறையுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என ஆட்சியர் அறிவுறுத்தியுள்ளார்.

மழைக்கால தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக அரசு அலுவலர்களுடன் வியாழக்கிழமை ஆலோசனை நடத்திய அவர், செய்தியாளர்களிடம் கூறியது:

மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடனும், சிறுதூறல், காற்றில் அதிக ஈரப்பதம், இரவு நேர வெப்ப நிலை குறைவாகவும் காணப்படுகிறது. எனவே, நெற்பயிரில் குலைநோய்த் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. இந்நோய் தாக்கிய பயிர்களில் இலைகளின் மேல் சாம்பல் நிற மையப் பகுதியுடன் காய்ந்த ஓரங்களுடன் கூடிய கண் வடிவ புள்ளிகள் காணப்படும். நோய் தாக்கப்பட்ட பயிர் வளர்ச்சி குன்றி காணப்படும். வளர்ச்சி குன்றியிருப்பதால் விவசாயிகள் கூடுதலாக தழைச்சத்து இடும்போது நோயின் தாக்குதல் தீவிரமடைந்து பயிர் முழுவதும் எரிந்ததுபோல் காணப்படும். இந்நோய் பயிரின் கணுக்களைத் தாக்கும்போது, கணுக்கள் பழுப்பு நிறமாக மாறி உடைந்துவிடுகின்றன. இதனைக் கணுக்குலை நோய் என்று அழைக்கிறோம்.

தாக்குதல் தீவிரமடையும்போது சாம்பல் நிறப் புள்ளிகள் கதிரின் கழுத்துப் பகுதியில் தோன்றுகின்றன. இதனைக் கழுத்துக் குலைநோய் என அழைக்கிறோம். கதிரின் கழுத்துப் பகுதியில் இந்நோய் தாக்கும்போது கதிர்களில் தானியம் உருவாகாது. கதிர்களின் மணிகள் குறைந்த எண்ணிக்கையில் தரம் குறைந்து உருவாகும். இதனால் மகசூல் குறைவு ஏற்படும்.

நோய்த் தாக்குதல் தென்படும்போது மருந்து தெளிப்பது அவசியம். டிரைசைக்கிளோசோல் 75 சதவீதம், நனையும் தூள் 120 கிராம், அசாக்சிஸ்டோரோபன் - 200 மிலி மற்றும் ஒட்டும் திரவம் 1 மிலி என்ற அளவில் 1 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்க வேண்டும். 15 நாள் கழித்து மீண்டும் ஒருமுறை தெளிக்க வேண்டும். நோய்த் தாக்குதலை அறிந்தவுடன் வேளாண்மை உதவி இயக்குநர் அல்லது வேளாண்மை அலுவலர் அல்லது துணை வேளாண்மை அலுவலர், உதவி வேளாண்மை அலுவலரை அணுகி உரிய பரிந்துரை பெற்று பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், அதிகம் பாதிப்படைந்த விவசாயிகள் நிவாரணம் பெறும் வகையில் நோய் தாக்கிய வயல்களை வேளாண்மைத் துறை மற்றும் வருவாய்த் துறை அலுவலர்கள் கூட்டாய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

கால்நடை பாதுகாப்பு: ஆடுகளைத் தாக்கும் நச்சுயிரி நோய்களில் முக்கியமானது நீலநாக்கு நோய். இந்நோய் செம்மறியாடுகளை அதிகளவில் தாக்கி மிகுந்த பொருளாதார இழப்பை ஏற்படுத்தும். மழைக் காலங்களில் குறிப்பாக அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் நோய்த் தாக்குதல் இருக்கும். கூலிகாய்ட்ஸ் என்ற சிறு கொசுக்கள் கடிக்கும்போதும் இந்த நோய் தாக்குகிறது. மேலும், நோயுற்ற ஆடுகளிலிருந்து மற்ற ஆடுகளுக்கும் இந்த நோய் பரவுகிறது.

இதனால், கால்நடைகளுக்கு காய்ச்சல் அதிகமாக இருக்கும். மூக்கில் சளி வரும். நாக்கு நீல நிறத்தில் ரத்த தேக்கங்களுடன் இருக்கும். வாய், உதடுகள், ஈறுகள், நாக்கு ஆகிய பகுதிகளில் புண் உண்டாகும். கால்

குளம்புகளும் தோலும் சேருமிடத்தில் வீக்கம் ஏற்படும். இந்நோய் கழுத்து தசைகளையும் பாதிப்பதால் கழுத்து ஒரு பக்கமாக சாய்ந்து காணப்படும். நீலநாக்கு நோயின் பாதிப்பானது சுற்றுப்புற சூழ்நிலை, மழை, ஈரப்பதம் மற்றும் நோய்க்கு காரணமான ஒட்டுண்ணிகளின் எண்ணிக்கையை பொருத்து மாறுபடும்.

மேலும், பருவமழை காலத்துக்கு முன்பே ஆடுகளுக்கு தடுப்பூசி போட வேண்டும். நோய்ப்பட்ட ஆடுகளை பிரித்து தனியே வைத்து, மருத்துவம் செய்திட வேண்டும். கூலிக்காய்ட்ஸ் சிறுகொசுக்கள் இனவிருத்தியாகும் இடங்களை (ஈரமான சேற்று நிலங்கள் மற்றும் அதற்கு அருகேயுள்ள மக்கிய தாவர வகைகள்) அழித்திட வேண்டும். நீலநாக்கு நோய் அறிகுறிகள் கண்டவுடன் கால்நடை மருத்துவரை அணுகி துரிதமாக நடவடிக்கை மேற்கொண்டு, நோய்ப்பட்ட ஆடுகளை பிரித்து தனியே வைத்திட வேண்டும் என்றார் ஆட்சியர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**இயந்திர நடவில் விவசாயிகள் ஆர்வம்**

உத்திரமேரூர்:விவசாயத்திற்கு, ஆட்கள் பற்றாக்குறையால் இயந்திரத்தின் மூலம் நடவு செய்யும் முறை, கிராமங்களில் அதிகரிக்க துவங்கி உள்ளது.பருவ மழையால் ஏரிகள் நிரம்பியதை அடுத்து, உத்திரமேரூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராமங்களில், விவசாய பணிகள் தீவிரமடைந்துள்ளன. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் மற்றும் தொழிற்சாலைகள் அதிகரிப்பு போன்றவற்றால் தற்போது விவசாய பணிக்கு, ஆட்கள் பற்றாக்குறை நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, நாற்றுகளை நடவு செய்வதற்கு கூலியை உயர்த்தி கொடுப்பாக கூறி தேடி பிடித்தாலும், ஆட்கள் கிடைக்காத நிலை நிலவுவதாக விவசாயிகள் புலம்பி வருகின்றனர். இந்நிலையில்,

கிராமப்புற விவசாயிகள் பெரும்பாலானோர், இயந்திரத்தின் மூலம் நடவு செய்யும் முறைக்கு மாறி உள்ளனர்.

இதுகுறித்து, அருங்குன்றம் பகுதி விவசாயிகள் கூறியதாவது:நடவு இயந்திர உரிமையாளர்கள், உற்பத்தி செய்த நாற்றுகளை கொண்டு வந்து ஏக்கருக்கு, 5,000 ரூபாய் வீதமும், நாற்றுகள் உற்பத்தி செய்து வைத்துள்ள விவசாயிகளிடம் ஏக்கருக்கு, 3,000 ரூபாய் வீதம் எனவும், நடவு செய்து தருகின்றனர். செலவு சற்று கூடுதலானாலும் நடவு இயந்திரத்தின் மூலம் தரமாகவும், விரைவாகவும் பணியை நிறைவு செய்ய முடிவது திருப்தி ஏற்படுத்துகிறது. இவ்வாறு அவர்கள் கூறுகின்றனர்.

## அரவை இயந்திரம் கொள்முதல் விலை பட்டியல் வரவேற்பு

காஞ்சிபுரம்:காட்டுப்பாக்கம், கோழிப்பண்ணையில், தீவன அரவை இயந்திரம் மற்றும் உபகரணங்கள் கொள்முதலுக்கான விலைப்பட்டியல் வரவேற்கப்படுவதாக, மாவட்ட ஆட்சியர் கஜலட்சுமி தெரிவித்துள்ளார்.இதுதொடர்பாக, மாவட்ட ஆட்சியர் கஜலட்சுமி வெளியிட்ட செய்திக்குறிப்பு:காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள, காட்டுப்பாக்கம் கோழிப்பண்ணையில், மத்திய அரசு உதவியுடன் கூடிய வான்கோழி வளர்ப்பு திட்டத்தின் கீழ், தீவன அரவை இயந்திரம் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட உள்ளன. தீவன அரவை இயந்திரத்திற்கான தொழில்நுட்ப விவரங்களை, விருப்பமுள்ள இயந்திர உற்பத்தியாளர்கள், போட்டி விலைப்பட்டியலை வரும் 13ம்தேதிக்குள் காட்டுப்பாக்கம் கோழிப்பண்ணை நிர்வாக அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## பவானிசாகர் வட்டார விவசாயிகளுக்கு பண்ணை கழிவு மேலாண்மை பயிற்சி

பவானிசாகர்: பவானிசாகர் வட்டார விவசாயிகளுக்கு, பண்ணை கழிவு மேலாண்மை பயிற்சி, தயிர் பள்ளத்தில் நடந்தது. இதில்,

பண்ணைக் கழிவுகளை எரிப்பதின் மூலம் ஏற்படும் தீமை, கழிவு மேலாண்மை குறித்து விளக்கப்பட்டது. மேலும் கரும்பு சோகை, தென்னை நார் போன்ற வேளாண் கழிவுகளை, புளூரோட்டஸ் காளான் மூலம் மக்க வைத்தல் பற்றி விளக்கி, காளான் விதைகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் வேளாண் உதவி இயக்குனர் உமாபதி, வேளாண் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் நடராஜன், சுந்தரராமன் ஆகியோர், பண்ணைக் கழிவு மேலாண்மை குறித்து எடுத்துரைத்தனர்.

**மேட்டூர் அணை நீர்திறப்பு 15,000 கனஅடியாக அதிகரிப்பு**

மேட்டூர்: மேட்டூர் அணை டெல்டா நீர்திறப்பு வினாடிக்கு, 15,000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. மேட்டூர் அணை நீர்மட்டம் கடந்த, 23ம் தேதி, 97.44 அடியாக உயர்ந்தது. டெல்டா பாசனத்துக்கு நீர்திறந்ததால், நீர்மட்டம் மீண்டும் சரிய துவங்கியது. நேற்று நீர்மட்டம், 88.820 அடியாகவும், நீர் இருப்பு, 51.313 டி.எம்.சி.,யாகவும் சரிந்தது. கடந்த, 12 நாளில் நீர்மட்டம், ஒன்பது அடியும், நீர் இருப்பு, 10 டி.எம்.சி.,யும் சரிந்துள்ளது. வினாடிக்கு, 12 ஆயிரம் கனஅடியாக இருந்த டெல்டா நீர்திறப்பு நேற்று முன்தினம் இரவு, 15 ஆயிரம், கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. இதனால், அணை நீர் இருப்பு நாள் ஒன்றுக்கு, 1.25 டி.எம்.சி., சரியும். நீர்திறப்பு அதிகரித்துள்ளதால், அணை, சுரங்க மின் நிலையங்களின் மின் உற்பத்தி, 120ல் இருந்து, 150 மெகாவாட்டாக அதிகரித்துள்ளது.

**2 ஆயிரம் டன் கடற்பாசி உற்பத்தி: சாகுபாடியாளர்கள் இலக்கு நிர்ணயம்**

ராமநாதபுரம்;நடப்பு ஆண்டில் 2 ஆயிரம் டன் கடற்பாசி உற்பத்தி செய்ய சாகுபடியாளர்கள் இலக்கு நிர்ணயித்து உள்ளனர். தமிழக மீனவர்களின் மாற்று வருமானம் தரும் தொழிலாக கடற்பாசி வளர்ப்பு உள்ளது. அறுவடைக்குப்பின் உலர்த்தப் படும் கடற்பாசி சாக்லேட், பற்பசை, பிஸ்கட், துணிகளுக்கு சாயம் உள்பட 240 பொருட்கள் தயாரிக்கவும், உணவு பொருட்கள் கெடாமல் பாதுகாக்கவும் பயன்படுகிறது.சாதாரண நிலையில் துவங்கிய கடற்பாசி வளர்ப்பு கடந்த 2005ல் வர்த்தக நோக்கில் கொள்முதல் செய்ய வெளி நாட்டு நிறுவனங்கள் முன் வந்தன. இதனால்

கடற்பாசி வளர்ப்பில் மீனவ குடும்பங்கள் அதிக ஆர்வம் காட்டி வரு கின்றன.

ராமநாதபுரம், தூத்துக் குடி, புதுக்கோட்டை கடலோர மாவட்டங்களில் 600க்கும் மேற்பட்ட குடும்பங்கள் கடற் பாசி வளர்ப்பில் ஈடுபடு கின்றன.

ஆண்டுக்கு 4 முறை அறு வடை செய்யப்படும் கடற்பாசி வளர்ப்பில் குடும்பத்திற்கு ரூ.12 ஆயிரம் மாத வருமானம் கிடைக்கிறது. 2011 ல் சாகுபடி செய்த கடற்பாசி உலர் நிலையில் 1,400 டன், 2012 ல் 1,500 டன் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. 2013 ஆக.30ல் ஏற்பட்ட சீதோஷ்ண நிலை மாற்றத்தால் ரூ.30 லட்சம் மதிப்பிலான கடற்பாசி கடலில் மூழ்கி நஷ்டம் ஏற்பட்டது. இதையடுத்து 2014 ல் யாரும் சாகுபடி செய்ய முன்வர வில்லை.

இந்த ஆண்டு கொள் முதல் நிறுவனங்களின் ஊக்கு விப்பால் கடற்பாசி வளர்ப்பில் மகளிர் குழுக்கள் முன் வந்தனர். இதில் 1,500 குடும்பங்கள் ஈடுபட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 2,000 டன் உற்பத்தி இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.தனியார் நிறுவன மேற் பார்வையாளர் ஒருவர் கூறு கையில், "" ஆண்டுக்கு 1.5 டன் கடற்பாசி சாகுபடி செய்தால் ரூ.1.25 லட்சம் கிடைக்கும். நாளுக்கு நாள் கடற்பாசி சாகு படியாளர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. நடப் பாண்டில் 2 ஆயிரம் டன் இலக்கை எட்டுவோம்," என்றார்.

**தேங்காயிலிருந்து மதிப்புகூட்டும்பொருட்கள் தயாரிக்கும் கம்பெனி**

சிங்கம்புணரி; ங்கம்புணரி வட்டாரத்தில் தென்னை உழவர் உற்பத்தியாளர் கம்பெனி அமைக்கும் பணி நடக்கிறது.இந்த வட்டாரத்தில் அதிகம் தென்னை மரங்கள் உள்ளதால் மாதந்தோறும் ஆயிரக்கணக்கான தேங்காய் விளைகிறது. விளையும் தேங்காயை விவசாயிகள் சில்லரையாகவும்,மொத்த வியாபாரிகளுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்கின்றனர்.

இங்கு தேங்காயிலிருந்துமதிப்பு கூட்டப்பட்ட 100 விதமான பொருட்கள் தயாரித்து நல்ல லாபம் பெற உழவர் கம்பெனி அமைக்கும் பணி

வேளாண்மை வணிகத்துறை சார்பில் நடக்கிறது.கம்பெனி உறுப்பினராவதற்கு 50 தென்னை மரம் வேண்டும். பங்குத்தொகை ரூ 1000 செலுத்தவேண்டும்.இதே அளவு தொகை மத்திய அரசு மானியமாக வழங்குகிறது.

கொச்சி தென்னை வாரியம்,மத்தி மாநில அரசுகள் சலுகை பெறலாம்.தேங்காயில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்து அதிக லாபம் பெறமுடியும் என்பதால் தென்னை விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.இதுவரை 300 பேர் கம்பெனி உறுப்பினர்களாகியுள்ளதாக வேளாண்மை வணிகத்துறையினர் தெரிவித்தனர்.